Visit QB365-SLMS - https://www.qb365.in/slms/ Complete Questions and Answers

Answers Key:

5 மதிப்பெண் வினாக்கள்

1. கணக்கேடுகள் பராமரிப்பின் நன்மைகள்:
1. நடவடிக்கைகள் அனைத்தும் முறையாக, காலவரிசைப்படி கணக்கேடுகளில் பதியப்படுகின்றன.இதனால் அணைத்து வணிக நடவடிக்கைகளுக்கும், கணக்கு ஏடு பராமரிப்பு நிரந்தரமான மட்டும் நம்பகத் தன்மையுள்ள ஆவணங்களை அளிக்கிறது.
2. கணக்கேடுகள் பராமரிப்பு நிதித் தகவல்கள் பெற உதவுகிறது.
3. இது அணைத்து வணிக செயல்பாடுகளையும் கட்டுப்படுத்த உதவுகிறது.
4. வணிக நிறுவனங்களின் கணக்கேடுகள் நீதிமன்ற வழக்குகளில் சட்டப்படியான சான்றாக ஏற்றுக் கொள்ளப்படுகின்றன.
5. பல்வேறு ஆண்டுகளின் நிதிவிவரங்களை ஒப்பிடுவது சாத்தியமாகிறது.மேலும், நிதி தகவல்களை, வேறு வணிக நிறுவனங்களுடன் ஒப்பிட்டுப் பார்க்க முடிகிறது.
6. செலுத்த வேண்டிய வரியினைக் கண்டுபிடிக்க கணக்கேடுகள் பரராமரிப்பு பயனுள்ளதாக இருக்கிறது.
கணக்கேடுகள் பராமரிப்பு குறைபாடுகள்:
1. இதில் பண மதிப்பிலான நடவடிக்கைகள் மட்டுமே பதியப்படுகின்றன.
2. இதில், விலை நிலை மாற்றங்கள் கணக்கில் எடுத்துக் கொள்ளப்படுவதில்லை.
3. இதில், கடந்த கால நிதி விவரங்களை மட்டுமே பதியப்படுகின்றன.

2.

கணக்கேடுகள் பராமரிப்பு	கணக்கியல்
1.செயல்பரப்பு: வணிக நடவடிக்கைகளைப் பதிவு செய்தல் மற்றும் வகைப்படுத்துதல் ஆகியவற்றை உள்ளடக்கியது.	நிதித் தகவல்களை, கணக்கேடுகளில் பதிவு செய்தல், வகைப்படுத்துதல்.பகுப்பாய்வு மற்றும் உய்த்துணர்தல் ஆகியவற்றை உள்ளடக்கியது.
2.நிலை: கணக்கியலின் முதன்மை நிலை கணக்கீடுகள் பராமரிப்பாகும்.	இது இரண்டாம் நிலையான பகுப்பாய்வு மற்றும் உய்த்துணர்த்துதல் ஆகியவற்றை உள்ளடக்கியது.
3. பணி இயல்பு: இது வழக்கமான மற்றும் எழுத்தர் பணி கொண்டது.	இது பகுப்பாய்வுத் தன்மை கொண்டது.
4. தேவையான அறிவு: இதற்கு குறிப்பேட்டில் பதிவு செய்தல், எடுத்தெழுதல் சார்ந்த அடிப்படை அறிவு தேவைப்படுகிறது.	கணக்கியல் பதிவுகளை மேற்கொள்ள கணக்கியல் விதிமுறைகள், செயல்முறைகள் மற்றும் நடைமுறைகள் சார்ந்த முழுமையான அறிவு தேவைப்படுகிறது.
5. தேவையான திறன்: பகுப்பாய்வு திறன் கணக்கு பராமரிப்பிற்கு தேவையில்லை	கனாகியலுக்கு பகுப்பாய்வு பகுப்பாய்வு திறன் தேவைப்படுகிறது.
6. நோக்கம் வணிக நடவடிக்கைகளை முறையாக ஏடுகளில் பராமரித்தல்	வணிகத்தின் நிகர முடிவினை அறிதல்

3 மதிப்பெண் வினாக்கள்

3. ஒரு குறிப்பிட்ட கணக்காண்டின் ஈட்டிய வருவாய் அக்கணக்காண்டின் செலவு அடங்களோடு ஒப்பிட்டு வியாபாரத்தின் முடிவை அறிவதே பொறுத்துகைக் கருது எனப்படுகிறது.
இது நிகழ்வு தீர்வு கருது மட்டும் கணக்கியல் காலா கருத்தினை அடிப்டையாகக் கொண்டதாகும்.
குறிப்பிட்ட ஆண்டில் மேற்கொள்ளப்படாமல் அந்த கணக்காண்டிற்குரிய செலவுகள் மட்டுமே கருத்தில் கொள்ளப்பட வேண்டும்.
இக்கருத்தின் அடிப்படையில் கொடுக்கப்பட வேண்டிய மற்றும் முன் கூட்டித் செலுத்திய செலவுகள் மற்றும் பெற வேண்டிய அல்லது முன்கூட்டிப் பெட்ரா வருமானங்கள் பான்முவற்றிக்கு சரிக்கட்டுதல்கள் செய்யப்படுகின்றன.
இவ்வாறாக இலாபநட்டப் பகிர்வுக்கு முன் ஒரு கணக்காண்டில் ஈட்டிய வருவாய், அவ்வாண்டில் அவ்வருவாயை ஈட்ட செய்த செலவுகளோடு ஒப்பீடு செய்வதன் மூலம் துல்லிய இலாபத்தை கணக்கிட முடியும்.

4. எந்த நடவடிக்கைகளை பணத்தால் அளவிட முடியுமோ, அந்த நடவடிக்கைகள் மட்டுமே கணக்குகளில் பதியப்பட வேண்டும் என்பது பணமதிப்பீட்டு கருத்து ஆகும்.
பணமானது பரிமாற்றத்தின் ஊடகமாக விளங்குவதால் பணத்தால் அளவிடக்கூடிய நடவடிக்கைகள் பதிவு செய்யப்படுகின்றன.கணக்கியலின், அளவிட்டு சுலபமாக ஒரு நாட்டினுடைய நாணயம் அமைகிறது.
பணத்தால் அளவிட முடியாத நடவடிக்கைகளை ஏடுகளில் பதியப்படுவது இல்லை. உதாரணமாக உற்பத்தி மேலாளர்க்கும், விற்பனை மேலாளர்க்கும் இடையேயான மனக்கசப்பினால் தொழில் பாதிக்கப்படுகிறது.
இந்நடவடிக்கைகள் ஏடுகளில் பதிவு செய்யப்படுவது இல்லை.ஏனென்றால் இதனை பணத்தால் அளவிட முடியாது.
பணம் ஒரு பொதுவான அளவீடாக இருப்பதால், பலதரப்பட்ட வணிக விவரங்களை அதன் மூலம் பதிவு செய்ய முடிகிறது.உதாரணமாக, ஒரு நிறுவனத்தில் 5 கணிப்பொறிகள், 2, மேசைகள், 3 நாற்காலிகள் அஆகிய சொத்துக்கள் உள்ளன. அவை கணிப்பொறிகள் ரூ.1,00,000/-, மேசை ரூ.10,000/-. நாற்காலிகள் ரூ.1,500/- என்ற பணமதிப்பில் குறிப்பிடவில்லையெனில், அச்சொத்துக்களை கூட்டுவது பயனுள்ள தகவலாக இருக்காது.

5. நிறுவன தொடர்ச்சி கருத்து:
இது ஒரு அடிப்படை கருத்து.இதன்படி ஒரு வணிக நிறுவனம் தொடராக கூடியது மற்றும் நீண்ட காலத்திற்கு தொடர்ந்து செயலாற்றும் என்ற எதிர்பார்ப்பின் அடிப்படையிலேயே நடத்தப்பட்டு வருகிறது.
இக்கருத்தின் அடிப்படையில்:
1. சொத்து மற்றும் பொறுப்புகளை மதிப்பீடு செய்தல்
2. நிலைச் சொத்தின் மீதான தேய்மானம்.
3. கொடுப்பட வேண்டிய மற்றும் முன்கூட்டிச் செய்த செலவுகள்.
4. பெறபடவேண்டிய மற்றும் கூடியுள்ள வருமானம்.

போன்றவைகளின் கணக்கியல் வழிமுறைகள் மேற்கொள்ளப்படுகின்றன.
உதாரணமாக, பொதுவாக சொத்துக்கள் புராதான அடக்கவிலையில் (Historical Cost) பதிவு செய்யப்படுகின்றன.சொத்துக்களின் மதிப்பில் உண்டாகும் குறுகிய கால ஏற்ற, இறக்கங்கள் கணக்கில் எடுத்துக் கொள்ளப்படுவதில்லை.

6. கணக்கியலில் பின்பற்ற வேண்டிய கட்டமைப்பையும் விதிகளையும், கணக்கியல் தரநிலைகள், தருவதால் வெவ்வேறு நிறுவனங்களின் நிதிநிலை அறிக்கைகளை ஒப்பீடு செய்ய முடிகிறது நிதிநிலை அறிக்கை தயார் செய்வதில் நிலைத்தன்மை, ஒப்பீட்டு தன்மை, நிறைவுத் தன்மை மற்றும் நம்பகத் தன்மையை உறுதிப்படுத்துவதற்கு கணக்கியல் கோட்பாடுகளை தர நிர்ணயம் செய்வது அவசியமாகிறது.
கோங்லர் என்பவற்றின் கூற்றுப்படி, "பொதுக் கணக்காளர் மற்றும் கணக்காளர்களின் நலனுக்காக வழங்கும் சட்டம் மற்றும் தொழில்சார் அமைப்புகளால் பொதுவாக உருவாக்கப்பட்ட வழிகாட்டு நெறிமுறைகளே கணக்கியல் தரநிலையாகும்."
கணக்கியல் தரநிலைகள் என்பது கணக்கியல் நடவடிக்கைகள் மற்றும் நிகழ்வுகளை அடையாளம் கண்டு, அளவிட்டு, பதிவு செய்து, தகவல்களை நிதி அறிக்கை வாயிலாக வெளிப்படுத்துவதற்காக கணக்கியல் வல்லுநர் குழு அல்லது அரசு அல்லது பிற ஒழுங்காற்று அமைப்புகளால் வெளியிடப்படும் கொள்கை ஆவணங்களாகும்.

7. 1. வணிகத்தில் ஒரு சொத்தானது புராதன அடக்கவிலையில் அதாவது வாகிய விலையில் பதிவு செய்யப்படுகிறது.
2. அனைத்து தொடரும் கனாகியலுக்கும் அடிப்படையாக அமையும்.
3. இது சொத்துக்கள் எப்போதுமே அடக்கவிலையில் காணப்பிக்கப்படும் என்று பொருளாகாது.சொத்து வாங்கும் போது அடக்கவிலையில் பதிவு செய்யப்பட்டு முறையாகத் தேய்மானம் புத்தக மதிப்பிலிருந்து கழிக்கப்பட்டு காண்பிக்கப்படுகிறது.
இதன் குறைபாடுகள்:
1. பணவீக்க காலத்தில், பொருட்களின் விலை அதிகரிக்கும் போது சொத்துக்களை புராதன அடக்க விலையில் மதிப்பீடுவது வணிகத்தின் உண்மையான நிலையைப் பிரதிபலிப்பதில்லை.
2. புராதன அடக்கவிலையில் சொத்துக்கள் பதிவு செய்யப்பட்டால் வெவ்வேறு நாட்களில் நிறுவப்பட்ட வணிக அமைப்புகளின் முடிவுகளை ஒப்பீடு செய்ய முடியாது.
3. மனிதவளங்கள் போன்ற அடக்கவிலையால் மதிப்பிட முடியாத சொத்துக்களை இக்கருத்தின் கீழ் அங்கீகரிக்க முடிவதில்லை.

8. 1. கணக்கியல் கொளகையும், நடைமுறைகளும் தொடர்ச்சியாக ஒரு கணக்காண்டிலிருந்து மற்றொரு கனகாந்திற்கும் பின்பற்றப்படும் என்பதை இம்மரபு தெரிவிக்கிறது.
2. ஒரே விதமான கணக்கியல் கொளகைகள் பின்பற்றப்பட்டால் தான் வெவ்வேறு ஆண்டுகளின் முடிவுகளை ஒப்பீடு செய்ய முடியும்.
3. உதாரணமாக, ஒரு நிறுவனம், நிலைச்சொத்து வாகியதிலிருந்தே நேர்கோட்டு தேய்மான முறையைப் பின்பற்றினால், தொடர்ச்சியாக அதையே பின்பற்ற வேண்டும்.இருப்பினும், இதனை மாற்றம் செய்யவே முடியாது எனப் பொருள் கொள்ள இயலாது.
பின்வரும் சூழ்நிலைகளில் கணக்கியல் கொள்கைகளில் மாற்றங்களை உருவாக்கலாம்.
1. சட்டத் தேவையைப் பூர்த்தி செய்ய.
2. கணக்கியல் தர நிர்ணயங்களுக்கு இணங்க
3. வணிகத்தின் உண்மையான மற்றும் நேர்மையான நிலையைப் பிரதிபலிக்க.

9. **அடக்கவிலைக் கருத்துகளின் குறைபாடுகள்:**
அ) பணவீக்க காலத்தில், பொருட்களின் விலை அதிகரிக்கும், போது சொத்துக்களைப் புராதன அடக்க விலையில் மதிப்பிடுவது வணிகத்தின் உண்மையான நிலையைப் பிரதிபலிப்பதில்லை.
(ஆ) புராதன அடக்க விலையில் சொத்துகள் பதிவு செய்யப்பட்டால், வெவ்வேறு நாட்களில் நிறுவப்பட்ட வணிக அமைப்புகளின் முடிவுகளை ஒப்பீடு செய்ய முடியாது.
(இ) மனித வளங்கள் போன்ற அடக்க விலையில் மதிப்பிட முடியாத சொத்துக்களை இக்கருத்தின் கீழ் அங்கீகரிக்க முடிவதில்லை.

10. **(i) அடக்கவிலைக் கருத்து:**
(1) வணிகத்தில் ஒரு சொத்தானது புராதன அடக்கவிலையில் அதாவது வாங்கிய விலையில் பதிவு செய்யப்படுகிறது.
(2) அடக்கவிலையே அனைத்து தொடரும் கணக்கியலுக்கும் அடிப்படையாக அமையும்.
(3) இது, சொத்துகள் எப்போதுமே அடக்க விலையில் காண்பிக்கப்படும் என்று பொருளாகாது.
(4) சொத்து வாங்கும் பொழுது அடக்கவிலையில் பதிவு செய்யப்பட்டு முறையாகத் தேய்மானம் புத்தக மதிப்பிலிருந்து கழிக்கப்பட்டு காண்பிக்கப்படுகிறது.
(ii) வருவாய் தீர்வு கருத்து:
(1) வருவாய் தீர்வு கருத்தின்படி, ஒரு சொத்தின் மதிப்பில் ஏற்படும் மாற்றம், அச்சொத்துக்கள் வணிகத்தால் தீர்வு செய்யப்படும் போது மட்டுமே பதிவு செய்யப்படும்.
(2) புராதன அடக்க விலையில் சொத்துக்கள் பதிவு செய்தால், சொத்தின் மதிப்பில் ஏற்படும் மாற்றம் அச்சொத்து தீர்வு செய்யும் போது மட்டுமே கணக்கில் கொண்டுவரப்பட வேண்டும்.

11. **கணக்கியல் தரநிலைகளின் தேவைகள்:**
(i) நிதிநிலை அறிக்கைகளை நன்கு புரிந்து கொள்வதற்கு.
(ii) கணக்காளர் ஒரே மாதிரியான செயல்முறைகள் மற்றும் நடைமுறைகளைப் பின்பற்றுவதற்கு.
(iii) இரண்டு மற்றும் அதற்கு மேற்பட்ட வணிக அமைப்புகளின் நிதிநிலை அறிக்கைகளை பயன்தருமுறையில் ஒப்பீடு செய்வதை எளிதாக்குவதற்கு.
(iv) நிதிநிலை அறிக்கையின் நம்பகத்தன்மையை அதிகரிப்பதற்கு.
(v) சட்டத் தேவைகளை சிறப்பாக நிறைவேற்றுவதற்கு.

12. **1. வணிகத் தனித்தன்மை கருத்து:**
அ) இந்தக் கருத்தின்படி, வணிகநிறுவனம், முதல் இடுகின்ற உரிமையாளர் அல்லது உரிமையாளர்களிடமிருந்து தனித்து மற்றும் வேறுபட்டுள்ளதாக கருதப்படுகிறது.
ஆ) இக்கருத்தின் அடிப்படையில் கணக்குகள், உரிமையாளரின் கண்ணோட்டத்தில் இல்லாமல் வணிக நிறுவனத்தின் கண்ணோட்டத்தில் தயாரிக்கப்படுகின்றன.
இ) ஆதலால், உரிமையாளரின் முதல், நிறுவனம் செலுத்த பொறுப்பாகும்.
2. பணமதிப்பீடுக் கருத்து:
அ) பணமதிப்பீட்டுக் கருத்தின்படி, எந்த நடவடிக்கைகளைப் பணத்தால் அளவிட முடியுமோ, அந்த நடவடிக்கைகள் மட்டுமே கணக்குகளில் பதியப்பட வேண்டும் என்பதைக் குறிக்கிறது.
ஆ) பணமானது பரிமாற்றத்தின் ஊடகமாக விளங்குவதால் பணத்தால் அளவிடக்கூடிய நடவடிக்கைகள் பதிவு செய்யப்படுகின்றன.
கணக்கியலின், அளவீட்டு அலகாக, ஒரு நாட்டினுடைய நாணயம் அமைகிறது.
3. நிறுவனத் தொடர்ச்சி கருத்து:
அ) இது ஒரு அடிப்படை கருத்து இதன்படி, ஒரு வணிக நிறுவனம் தொடரக்கூடியது மற்றும் நீண்ட காலத்திற்கு தொடர்ந்து செயலாற்றும்

QB365™ Study Material
QUESTION BANK 365

என்ற எதிர்பார்ப்பின் அடிப்படையிலேயே நடத்தப்பட்டு வருகிறது.
ஆ) இக்கருத்தின் அடிப்படியில் சொத்துக்கள் மற்றும் பொறுப்புகளை மதிப்பீடு செய்தல், நிலைச்சொத்தின் மீதான தேய்மானம், கொடுபட வேண்டிய மற்றும் முன்கூட்டிச் செலுத்திய செலவுகள், பெற வேண்டிய மற்றும் கூட்டியுள்ள வருமானம் போன்றவைகளின் கணக்கியல் வழிமுறைகள் மேற்கொள்கின்றன.

2 மதிப்பெண் வினாக்கள்

13. ஜே.ஆர்.பேட்லிபாய் அவர்களின் கூற்றுப்பா, "கணக்கு ஏடுகள் பராமரிப்பு என்பது வணிக நடவடிக்கைகளை ஏடுகளில் பதிவு செய்யும் ஒரு கலையாகும்."
ஆர்.என்.கார்டர் அவர்களின் கூற்றுப்பா "கணக்கேடுகள் பராமரிப்பு என்பது, பணம் அல்லது பணத்தின் மதிப்பிலுள்ள அணைத்து வணிகிய நடவடிக்கைகளையும் கணக்கேடுகளில் சரியாக பதிவு செய்யும் காலை மற்றும் அறிவியல் ஆகும்."
14. i. கணக்கியல் கருத்துக்கள் என்பது கணக்கியல் அடிப்படை அனுமானங்களாகும் கணக்கியலானது, அடிப்படை அனுமானங்கள் அல்லது நிபந்தனைகளான கணக்கியல் கருத்துக்களை அடித்தளமாக கொண்டுள்ளது.
ii. கணக்கியல் கருத்துக்கள் என்பது பரந்த ஒருமித்த கருத்துக்களின் விளைவாகும். பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட எண்ணம் அல்லது சாராசம் கருது எனபபொருள்படும்.இவை, கணக்கியல் செயல்முறை மற்றும் கணக்கியல் அறிக்கைகள் ஆகியவற்றிற்கு ஒரே மாதிரியான கட்டமைப்பைத் தருகின்றன.
15. வருவாய் தீர்வு கருத்தின்படி, ஒரு சொத்து மதிப்பில் ஏற்படும் மாற்றம், அச்சொத்துக்கள் வணிகத்தால் தீர்வு செய்யப்படும் போதும் மட்டுமே பதிவு செய்யப்படும்.புராதன அடக்கவிலையில் சொத்துக்கள் பதிவு செய்தால், சொத்தின் மதிப்பில் ஏற்படும் மாற்றம் அச்சொத்து தீர்வு செய்யும் போது மட்டுமே கணக்கில் கொண்டுவரப்பட வேண்டும்.
16. கணக்கு அறிக்கைகள் அனைவர்க்கும் முக்கிய தகவல்களை முழுமையாக வெளியிட வேண்டும்.இதன் அடிப்படையில் ஆர்வமுள்ளவர்கள் தக்க முடிவினை எடுப்பதற்கு உகந்த வகையில் நிதிநிலை அறிக்கையில் பல்வேறு வகையான விளக்கத்துடன் நேர்மையானதாகவும், முழுமையானதாகவும் கூடிய கணக்கியல் தகவல்களை தர வேண்டும்.
17. ஒரு வணிக நிறுவனம் நீண்ட காலம் தொடர்ந்து நடைபெற்று இலாபமூட்டும் என்ற எதிர்பார்ப்பிலே நடத்தப்பட்டு வருகிறது.இக்கண்ணோடத்திலேயே நடவடிக்கைகள் பதிவு செய்யப்படுகின்றன.எதிர்காலத்தில் நிறுவனம் கலைக்கப்படும் தேவை எழும் என்ற எதிர்பார்ப்பு இருப்பதில்லை.
18. 1. இது வணிக நடவடிக்கைக்கள், கணக்கேடுகளில் பதிவு செய்வதற்கான செயல்முறை ஆகும்.
2. பணமதிப்பிலான நடவடிக்கைகள் மட்டுமே கணக்கேடுகளில் பதியப்படுகின்றன.
3. கணக்கேடுகள் பராமரிப்பே, கணக்கியல் செயல்பாட்டின் முதனமை நிலை ஆகும்.
4. கணக்கேடுகள் பராமரிப்பு, குறிப்பேட்டில் பதிதல் மற்றும் பேரேட்டில் எடுத்தெழுதல் ஆகியவற்றை உள்ளடக்கியது.
19. 1. அனைத்து வணிக நடவடிக்கைகளையும் காலவரிசைப்படி உரிய தலைப்புகளில் பதிவு செய்து முழுமையான மற்றும் நிலையான ஆவணங்களாக வைத்திருத்தல்.
2. ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு வணிகத்தின் இலாபம் அல்லது நடத்தை கணக்கிட உதவும்.
3. நிதிநிலையை அறிய உதவும்.
4. வணிக வளர்ச்சியை அறிதல்
5. செலுத்த வேண்டிய வரியினைக் கண்டறிதல்
6. சட்டத் தேவைகளை பூர்த்தி செய்தல்

QB™ 365 Study Material
QUESTION BANK 365

20. 1. இக்கருத்தின்படி ஒவ்வொரு நடவடிக்கையும் அல்லது நிகழ்வும் இரண்டு தன்மைகளைக் கொண்டிருக்கும்.உதாரணமாக ஒரு நிறுவனம் ஒரு சொத்தை வாங்கும்போது அதற்கான மறுபயனை ரொக்கமாக செலுத்த வேண்டும்.இதில் சொத்து என்ற பலன் பெரும் போது ரொக்கம் என்ற பலன் தரப்படுகிறது.
2 இக்கருத்து, ஒவ்வொரு பற்றுத் தன்மைக்கும் தொடர்புடைய மற்றும் நிகரான வரவு இருப்பதாய் உணர்த்துகிறது.இதுவே இரட்டைப்பதிவு முறையில் கணக்கேடுகள் பராமரிப்பு அனைத்திற்கும் அடிப்படையாக விளங்குகிறது.
3. இக்கருத்திலிருந்தே அடிப்படை கணக்கியல் சமன்பாடு உருவாக்கப்பட்டுள்ளது.அதாவது முதல் பொறுப்புகள் - சொத்துக்கள்.
21. 1. கணக்குகள் ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு தயாரிப்பதை இக்கருத்துக்கு குறிக்கிறது.
2. உரிமையாளர்கள், முதலீட்டாளர்கள், கடனீந்தோர், பணியாளர்கள் மற்றும் அரசு ஆகியோர் அவ்வபோது நிறுவனங்களின் செயல்திறனை அறிந்து கொள்ள ஆர்வம் கொள்வதால் கணக்குகள் ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு பொதுவாக ஒரு ஆண்டிற்கு தயாரிக்கப்பட வேண்டும்.
3. இக்கருத்து, உரிமையாளர்களுக்கு வணிகத்தின் வருமானத்தை பகிர்ந்தளிக்கவும் மற்றும் வெவ்வேறு காலங்களில் நிறுவனத்திறனை ஒப்பிட்டு பார்க்கவும், மதிப்பீடு செய்யவும் உதவுகிறது.
22. 1. நிதிநிலை அறிக்கைகள் நன்கு புரிந்து கொள்வதற்கு.
2. கணக்காளர் ஒரே மாதிரியான செயல்முறைகள் மற்றும் நடைமுறைகளைப் பின்பற்றுவதற்கு.
3. இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட வணிக அமைப்புகளின் நிதிநிலை அறிக்கைகளை பயன்தருமுறையில் ஒப்பீடு செய்வதை எளிதாக்குகிறது.
4. நிதிநிலை அறிக்கையின் நம்பகத்தன்மையை அதிகரிப்பதற்கு.
5. சட்டத் தேவைகளை நிறைவேற்றுவதற்கு.
23. (1) கணக்கேடுகள் பராமரிப்பு என்பது கணக்கு ஏடுகளில் நிதி நடவடிக்கைகளைப் பதிவு செய்யும் ஒரு செயல்முறை. இதுவே, கணக்கியலின் முதன்மை செயல்முறையாகும்.
(2) இது, நடவடிக்கைகளைப் பதிதல், மற்றும் தலைப்புக்கேற்றவாறு வகைப்படுத்துதல் ஆகியவற்றை உள்ளடக்கியது.
24. (1) கணக்கியல் என்பது கணக்குப்பதிவியலின் ஒரு பகுதியாகும்.
(2) கணக்கியல் என்பது நிதித் தகவல்களை பதிவு செய்தல், வகைப்படுத்துதல், பகுப்பாய்வுசெய்தல் மற்றும் உய்த்துணர்தல் போன்ற செயல்களைக் கொண்டதாகும்.
25. கணக்குப் பதிவியல் என்பது, கணக்கியல் செயல்முறையின் முறையான அறிவு மற்றும் தரங்கள், கோட்பாடுகள், கொள்கைகள், வழிமுறைகள் ஆகியவற்றை உள்ளடக்கியது.
26. (1) பன்னாட்டு நிதி அறிக்கை தரநிலைகள் (IFRS) பன்னாட்டு கணக்கியல் தரநிலை வாரியத்தால் (IASB) வழங்கப்படுவதாகும்.
(2) இது பன்னாட்டு தரநிலைகளின் தொகுப்பு. இது குறிப்பிட்ட நடவடிக்கை மற்றும் பிறநிகழ்வுகள் எவ்வாறு நிதிநிலை அறிக்கைகளில், அறிக்கையிடப்பட வேண்டும் என்பதை விளங்குகிறது.
(3) கணக்கியல் தரநிலைகளை உலக அளவில் ஏற்றுக்கொள்ளும் படியும், மற்றும் பன்னாட்டு அளவில் நிதிநிலை அறிக்கைகளை மேம்படுத்தும் வண்ணம் உருவாக்கவும் சர்வதேச நிதி அறிக்கை தரநிலைகள் வெளியிடப்படுகின்றன.

27. நடவடிக்கைகளைப் பதிவு செய்வதில் இரண்டு விதமான அணுகுமுறைகள் உள்ளன.
அவையாவன,
(i) கணக்கியல் சமன்பாட்டு முறை
(ii) பாரம்பரிய அணுகுமுறை

QB 365 Study Material
QUESTION BANK 365